# பட்டு வளர்ச்சி மற்றும் கைவினைப் பொருட்கள்

மானியக் கோரிக்கை எண். 18

அறிவிப்புகள்
2021-2022

தா.மோ.அன்பரசன்
ஊரகத் தொழில் துறை அமைச்சர்

# பட்டுவளர்ச்சித்துறை

1. ரூபாய் 5 கோடியே 25 இலட்சம் மதிப்பில் வெண்பட்டு கூடுகளின் தரத்தை அதிகரிக்க 1,000 பட்டு விவசாயிகளுக்கு நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வழங்கப்படும்

வெண்பட்டுப்புழு வளர்ப்பில் பட்டுக்கூடுகளின் தரம் மற்றும் உற்பத்தி திறனை அதிகரித்திட, 1,000 பட்டு விவசாயிகளுக்கு உயர்தர பட்டுப்புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**2. தரமான பட்டுக்கூடுகள் உற்பத்தியினை ஊக்குவிக்க, 300 பட்டு விவசாயிகளுக்கு ரூபாய் 3 கோடியே 60 இலட்சம் மதிப்பில் தனி பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைக்க உதவித்தொகை வழங்கப்படும்**

பட்டுப்புழு வளர்ப்பிற்கு தேவையான தட்பவெப்பநிலை மற்றும் சுகாதாரமான முறையில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு, தரமான பட்டுக்கூடுகள் அறுவடை செய்திடும் வகையில், பட்டுப்புழுவளர்ப்பு மனை அமைக்க, இதுவரை 87,500/- ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. அவ்வுதவித் தொகை இவ்வாண்டு முதல் 1,20,000/- ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் 300 பட்டு விவசாயிகள் பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைத்துப் பயன்பெறும் வகையில் மொத்தம் 3 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.



**3. ரூபாய் 5 கோடியே 25 இலட்சம் மதிப்பில் 5,000 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை வழங்கப்படும்**

2016-2017-ஆம் ஆண்டு முதல் 3,500 ஏக்கரில் மல்பெரி நடவு செய்ய ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதனை 5,000 ஏக்கராக உயர்த்தி, உயர் விளைச்சல் தரும் மல்பெரி இரகங்கள் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ஊக்கத்தொகையாக 10,500 ரூபாய் வீதம் மொத்தம் 5 கோடியே 25 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

## 4. ரூபாய் 70 இலட்சம் மதிப்பில் 200 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர் கொள்முதல் செய்து வழங்கப்படும்

பட்டு விவசாயிகளின் மல்பெரித் தோட்டங்களில் வேலையாட்கள் பயன்பாட்டினைக் குறைத்து தோட்டப் பராமரிப்புப் பணிகளை எளிதாக மேற்கொள்ள பவர் டில்லர் பயன்படுகிறது.

பட்டு விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையினை ஏற்று முன்னோடி பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், 2021–2022–ஆம் ஆண்டில், முதல் முறையாக 200 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லருக்கு தலா 35,000/– ரூபாய் வீதம், 200 பவர் டில்லர்கள் கொள்முதல் செய்து வழங்கிட மொத்தம் 70 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.



## 5. ரூபாய் 20 இலட்சம் மதிப்பில் நான்கு அரசு ஆதார விதைப் பண்ணைகள் வலுப்படுத்தப்படும்

வர்த்தக ரீதியிலான பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யும் நான்கு அரசு ஆதார விதைப் பண்ணைகளை வலுப்படுத்திட, ஒரு பண்ணைக்கு 5 இலட்சம் ரூபாய் வீதம் 20 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

## 6. ரூபாய் 24 இலட்சத்து 45 ஆயிரம் மதிப்பில் மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும்

2021-2022-ஆம் ஆண்டில் வெண்பட்டுக் கூடுகள் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில், மாவட்ட அளவில் 37 மாவட்டங்களில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே ரூபாய் 25,000/-, ரூபாய் 20,000/-, ரூபாய் 15,000/- பரிசும், மாநில அளவில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முறையே, ரூபாய் 1,00,000/-, ரூபாய் 75,000/-, ரூபாய் 50,000/- பரிசுகள் வழங்கிட 24 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.



## 7. ரூபாய் 4 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் மாநில அளவில் சிறந்த பட்டு நூற்பாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கப்படும்

2021-2022-ஆம் ஆண்டில் தரமான பட்டு நூல் உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில், அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் அதிக அளவு பட்டு வர்த்தகம் செய்யும் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்கள் மற்றும் பலமுனை பட்டு நூற்பாளர்களுக்கு, மாநில அளவில் முறையே 1,00,000/- ரூபாய், 75,000/- ரூபாய், 50,000/- ரூபாய் என முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ரொக்கப் பரிசுகள் வழங்கிட 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும்.

## 8. ரூபாய் ஒரு கோடியே 82 இலட்சம் மதிப்பில் 14 அரசு பட்டுப்பண்ணைகளில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையில் இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்கப்படும்

பட்டு விவசாயிகளுக்கு தரமான இளம்புழுக்கள் உற்பத்தி செய்து வழங்கிடவும், பட்டு விவசாயிகளிடையே இளம்புழுக்கள் நுகர்வினை அதிகரிக்கவும், மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திடும் வகையில், முதன்முறையாக 14 அரசு பட்டுப் பண்ணைகளில் 14 இளம்புழு வளர்ப்பு மையங்கள் தலா 13 இலட்சம் ரூபாய் என ஒரு கோடியே 82 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படும்.

இந்த இளம்புழு வளர்ப்பு மையம் அமைப்பதற்கான செலவினம் 13 இலட்சம் ரூபாயில், தலா 7 இலட்சம் ரூபாய் மாநிலத் திட்டத்தின் மூலமும், தலா 6 இலட்சம் ரூபாய் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டத்தின் மூலமும் இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்கப்படும்.



## 9. ரூபாய் 2 கோடியே 42 இலட்சம் மதிப்பில் பட்டுவளர்ச்சித் துறையின் அனைத்து செயல்பாடுகளும் கணினிமயமாக்கப்படும்

பட்டு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள் மற்றும் பட்டு முறுக்காளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை விரைவாக மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் வழங்கிடும் பொருட்டு, பட்டுவளர்ச்சித் துறையின் செயல்பாடுகளை முற்றிலுமாக கணினிமயமாக்கிட 2 கோடியே 42 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படும்.

தமிழ்நாடு கைத்திறத்
தொழில்கள் வளர்ச்சிக்கழகம்

## 1. ரூபாய் ஒரு கோடி செலவில் பூம்புகார் நிறுவனத்தின் பொன் விழா ஆண்டு சிறப்பாக கொண்டாடப்படும்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கும் அவர்களை அங்கீகரிப்பதற்கும், சிறப்பாக செயலாற்றி வருகிறது. இந்நிறுவனம் துவங்கி 2023–ஆம் ஆண்டு 50 ஆண்டுகள் நிறைவடைவதால் இதை பொன் விழா ஆண்டாக சிறப்பாகக் கொண்டாட, ரூபாய் ஒரு கோடி நிதியுதவி வழங்கப்படும்.

## 2. ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் செலவில், 7 பூம்புகார் கைவினைப் பொருட்கள் உற்பத்தி நிலையங்கள் மேம்படுத்தப்படும்

கைவினைஞர்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த நாச்சியார்கோவில், மதுரை, வாகைகுளம், சுவாமிமலை, தஞ்சாவூர், கள்ளக்குறிச்சி மற்றும் மாமல்லபுரம் ஆகிய 7 இடங்களில் அமைந்துள்ள பூம்புகாரின் சொந்த உற்பத்தி நிலையங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அவற்றை ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் செலவில் சீர்செய்து மேம்படுத்தப்படும்.



## 3. ரூபாய் 5 கோடி செலவில் 4 பூம்புகார் விற்பனை நிலையங்கள் புதுப்பிக்கப்படும்

பூம்புகாரின் முக்கிய பெரும் விற்பனை நிலையங்கள் சென்னை, கோயம்புத்தூர், புதுதில்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இவை பழுதடைந்துள்ளதால், இவ்விற்பனை நிலையங்களை புதுப்பித்து மற்றும் அழகுபடுத்தி வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் ரூபாய் 5 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

## 4. ரூபாய் ஒரு கோடி செலவில் மாமல்லபுரத்தில் அமைந்துள்ள நகர்ப்புறக் கண்காட்சித் திடல் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும்

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மாமல்லபுரம் கடற்கரை சாலையில் சுமார் 4.45 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 4.25 கோடி செலவில் ஒரு நிரந்தர நகர்ப்புறக் கண்காட்சித் திடல் அமைக்கப்பட்டுள்ளது. இதனை விரிவுபடுத்தும் வகையில் மேலும், 14 விற்பனை அரங்குகள், உணவுக்கூடம், கைத்திறப் பொருட்கள் செய்முறை விளக்கக்காட்சி அரங்கம் மற்றும் நுழைவு வாயில் போன்ற பணிகளை மேற்கொள்ள ரூபாய் ஒரு கோடி நிதியுதவி வழங்கப்படும்.

**தா.மோ.அன்பரசன்**

ஊரகத்தொழில் துறை அமைச்சர்